வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2550/ஆ5/2023, நாள். 16.08.2023

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – 2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது – பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– வீதம் (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி வங்கி கணக்கில் RTGS வாயிலாக தொகையினை அனுப்ப வங்கி கணக்கு விவரங்கள் அனுப்ப கோரப்பட்டது – வங்கி கணக்கு விவரங்கள் அனுப்பாத பள்ளிகள் உடன் அனுப்ப கோருதல் – தொடர்பாக |
| பார்வை | 1. 2022–2023ம் ஆண்டு தமிழ் வளர்ச்ச் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.01 நாள். 19.04.2022<br>2. அரசாணை (நிலை) எண். 123, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ1–1)த் துறை நாள். 25.08.2022<br>3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015671/எம்/இ1/2022, நாள்.15.06.2023<br>4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித ந.க.எண்.13.07.2023 |

.....

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 19.04.2022ஆம் நாளன்று நடைபெற்ற 2022–2023ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின் அறிவிப்பின் படி "அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ் மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்திடும் வகையிலும், தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ்மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வீதம் நிதியுதவி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் தமிழ்நாடு பள்ளி கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ்மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்திடவும், தொடர் செலவினங்கள் மேற்கொள்ளவும், பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளியின் வங்கி கணக்கில் RTGS வாயிலாக தொகையினை அனுப்ப ஏதுவாக வங்கி கணக்கு விவரங்கள் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 2 நகல்களில் தலைமையாசியரின் கையொப்பத்துடன் மற்றும் வங்கி புத்தகத்தின் முதல் பக்க நகல் இணைத்து இவ்வலுவலக ஆ5 பிரிவில் 21.07.2023 மாலை 4.00 மணிக்குள் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு பார்வை 4–ல் காணும் இவ்வலுவக கடிதம் மூலம் அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதுநாள் வரை கீழ்காணும் பள்ளிகளிடமிருந்து வங்கி கணக்கு விவரங்கள் பெறப்படவில்லை இது மிகவும் வருந்ததக்க செயலாகும். எனவே இப்பொருள் சார்பாக வங்கி கணக்கு விவரங்கள் அனுப்பாத பள்ளிகள் அதற்கான காரணத்தை தெரிவித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பள்ளியின் வங்கி கணக்கு விவரத்தினை பூர்த்தி செய்து தலைமையாசியரின் கையொப்பத்துடன் மற்றும் வங்கி புத்தகத்தின் முதல் பக்க நகல் இணைத்து உடனே இவ்வலுவலக ஆ5 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**விவரங்கள் ஒப்படைக்காத பள்ளிகளின் பெயர் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | அமேநிப பொய்கை (பெ) | 26 | அஉநிப மேல்மாயில் |
| 2 | அமேநிப ஒடுக்கத்தூர் (பெ) | 27 | ஆதிநல அஉநிப அம்மனாங்குப்பம் |
| 3 | அமேநிப பள்ளிகொண்டா (பெ) | 28 | அமேநிப கார்ணாம்பட்டு |
| 4 | அமேநிப பொய்கை (ஆ) | 29 | அஉநிப கரிகிரி |
| 5 | அமேநிப விரிஞ்சிபுரம் | 30 | அமேநிப பொன்னை (ஆ) |
| 6 | அஉநிப பீஞ்சமந்தை | 31 | அஉநிப செம்பேடு குடியாத்தம் |
| 7 | ஆதிநல அஉநிப முகமதுபுரம் | 32 | அஉநிப கல்லூர் |
| 8 | அஉநிப மூலைகேட் | 33 | அஉநிப காளியம்மன்பட்டி |
| 9 | அமேநிப சின்னபள்ளிகுப்பம் | 34 | ஆதிநல அஉநிப செட்டிகுப்பம் |
| 10 | அமேநிப ஊசூர் (பெ) | 35 | ஆதிநல அஉநிப ஓலக்காசி |
| 11 | அஉநிப மேல்மொணவூர் | 36 | ஆதிநல அஉநிப ஆர். வெங்கடாபுரம் |
| 12 | நஉநிப கொசப்பேட்டை | 37 | அஉநிப கொல்லமங்கலம் |
| 13 | அ முஸ்லீம் மேநிப வேலூர் | 38 | அஉநிப பள்ளிகுப்பம் |
| 14 | ஈ.வி.ஆர்.என் (பெ) அமேநிப வேலூர் | 39 | அமேநிப வளத்தூர் |
| 15 | கேஏகேஎம் நமேநிப சைதாப்பேட்டை | 40 | அமேநிப கூடாநகரம் |
| 16 | ஆதிநல அமேநிப பெருமுடிக | 41 | அமேநிப அக்ராவரம் |
| 17 | அஉநிப கீழஅசரம்பட்டு (பெ) | 42 | அமேநிப கல்லப்பாடி |
| 18 | அஉநிப இடையஞ்சாத்து | 43 | அஉநிப சாத்கர் |
| 19 | அஉநிப மூஞ்சூர்பட்டு | 44 | அஉநிப ஏரிகுத்தி |
| 20 | அமேநிப பென்னாத்தூர் | 45 | அஉநிப எருக்கம்பட்டு |
| 21 | அமேநிப விருபாட்சிபுரம் | 46 | அமேநிப பேர்ணாம்பட்டு (பெ) |
| 22 | அமேநிப லத்தேரி (ஆ) | 47 | ஆதிநல மேநிப டி.டி. மோட்டூர் |
| 23 | அமேநிப குடியாத்தம் (ஆர்.எஸ்) | 48 | ஆதிநல மேநிப பேர்ணாம்பட்டு |
| 24 | ஆதிநல அமேநிப பில்லாந்திப்பட்டு | 49 | ஆதிநல அமேநிப அலமேலுரங்காபுரம் |
| 25 | அஉநிப மாச்சனூர் | | |

இணைப்பு – படிவம்

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்.
சார்ந்த பள்ளி தலைமையாசியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
நகல்.

1. சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம். (இப்பொருள் சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

ணஅரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் மன்றங்கள் மேம்படுத்தி தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் நடத்திடல்
(2022–2023 தமிழ் வளர்ச்சி மானிய கோரிக்கை)

படிவம்

| வ. எண் | பள்ளியின் பெயர் | தலைமையாசியர் பெயர் | தலைமையாசிரியர் கைபேசி எண் | வங்கியின் பெயர் | வங்கியின் கிளை பெயர் | வங்கி கணக்கு எண் | IFSC CODE | MICR CODE |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

தலைமையாசிரியர் கையொப்பம்